‘தொழிலாளர்களைத் தேடி மருத்துவம்’ புற்று நோய்க்கான சிறப்பு சிகிச்சை!

அரசு மருத்துவமனைகளில் குழந்தையின்மைக்கான சிறப்பு சிகிச்சை!

சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜூன் 23- சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் மா. சுப்பிரமணியன், தொழிலாளர்களைத் தேடி மருத்துவம், குழந்தையின்மைக்கான சிறப்பு சிகிச்சை, புற்றுநோய்க்கான சிறப்பு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார்.

இது குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் அளித்த பதில் வருமாறு:-

தொற்றா நோய்களுக்கான சேவைகள் வழங்குவதில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில் தொற்றா நோய்களுக்கான சேவைகளை பயனாளிகளின் இல்லங்களுக்கே தேடிச் சென்று அளிக்கும் வகையில், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் சீறிய திட்டங்களில் ஒன்றான “மக்களைத் தேடி மருத்துவம்“ என்கின்ற திட்டம் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் களப் பணியாளர்கள் இல்லங்களுக்கே சென்று தொற்றாநோய் பரிசோதனைகளை வழங்கும் நேரத்தில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்பாலான மக்கள் வேலைக்கு செல்வதால் அவர்கள் இச்சேவைகள் கிடைக்காமல் விடுபடுகின்றனர் என்பது கண்டறியப்பட்டது.

இந்தவகையில், முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் தொழிலாளர்களின் நலனில் தனி அக்கறை கொண்டு தொழிற்சாலைகளிலும் கட்டுமானம் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொற்றாநோய்களினால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும்பொருட்டு சிறப்பு முயற்சியாக தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம் எனும் தொற்றா நோய்களுக்கான திட்டம் ஒன்றை 09.01.2024 அன்று திருவள்ளூரில் இருக்கின்ற Hyundai Mobis Plantல் தொடங்கி வைக்கப்பட்டது.

அந்தத் திட்டத்தில் இது வரை 711 தொழிற்சாலைகளிலுள்ள 8.35 இலட்சம் தொழிலாளர்களுக்கு அந்த திட்டம் பயன்படுகின்றவகையில், ஊரக நலப்பணிகள் இயக்ககம் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் (Directorate of Industrial Safety and Health) என்கிற அமைப்புகளோடு சேர்ந்து உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்களுக்கான பரிசோதனை முகாம்கள் அந்தந்த தொழிற்சாலைகளிலேயே நடத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தால் புலம்பெயர் தொழிலாளர்களும் பயனடைந்து வருகின்றார்கள் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம் 10.06.2024 வரை 476 தொழிற்சாலைகளில் 2,87,114 நபர்களுக்கு தொற்றா நோய்களுக்கான உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களுக்கான பரிசோதனை செய்யப்பட்டதில் 25,075 பேர் புதிதாக தொற்றா நோய்களுக்கான சாத்தியக்கூறு உள்ளவர்கள் என கண்டறியப்பட்டுள்ளனர்.

மேலும், ஏற்கெனவே தொற்றாநோய் பாதிப்புள்ளவர்கள் 11,062 நபர்கள் எனவும் தொற்றா நோய்களான உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் பாதிப்பு இல்லாதவர்கள் 2,50,977 எனவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் அம்பத்தூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் கோரியிருப்பதைப் போல சென்னை மாநகராட்சியிலுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டைப் பகுதியில் 500க்கும் மேற்பட்ட பெரிய தொழிற்சாலைகளும், சிறிய தொழிற்சாலைகளும் இருக்கிறது. அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு கிண்டி, திருமுடிவாக்கம் போன்ற பல்வேறு பகுதிகளிலும் குறு, சிறு தொழில்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கேயெல்லாம் இத்திட்டத்தை விரிவாக்கம் செய்து அவர்களுக்கும் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணியும் விரைவில் நடைபெறவிருக்கிறது.

குழந்தையின்மைக்கான சிகிச்சை

தமிழ்நாட்டில் இருக்கிற வட்டார பொது மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மகப்பேறுவிற்காக வருகிற தாய்மார்களுக்கு Counselling திட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது. இருந்தாலும் உறுப்பினர் சொல்லியிருப்பது போல அதில் சிறப்பு கவனம் செலுத்தி, இன்னமும் அதை கூடுதலாக்கும் முயற்சியை துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொடக்குறிச்சி தொகுதி ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்துதல்

மொடக்குறிச்சித் தொகுதியில் இருக்கின்ற மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனை 15வது நிதி ஆணையத்தின் ஆதாரம் கொண்டு, பணிகள் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறுது. விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படும்.

புற்றுநோய்க்கான சிறப்பு சிகிச்சை

புற்றுநோயைப் பொறுத்தவரையில், இன்றைக்கு உலகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிற நோய்களில் ஒன்றாகவே இருந்துக் கொண்டிருக்கிறது. அந்தவகையில்தான் முதலமைச்சர் அவர்கள், இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னாள் வரை தமிழகத்தில் இருந்து புற்றுநோய் ஆராய்ச்சி கருவி PETCT Scan கருவி இரண்டு இடங்களில் மட்டுமே இருந்தது, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு இரண்டு இடங்களில் மட்டுமே இருந்த PETCT Scan கருவி நாகர்கோவில், தஞ்சாவூர், சேலம், கோவை, காஞ்சிபுரம், இப்போது 7 இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. நான்கு, ஐந்து குறிப்பிட்ட மாவட்டங்களில் புற்றுநோய்க்கான அறிகுறிகள் அதிகரித்து வருகிற நிலையில் அவர்களுக்கு முழுமையாக பரிசோதனை அந்த மக்களுக்கு செய்து, தொடக்க நிலையிலேயே புற்றுநோயை கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

அந்த வகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஈரோட்டில் அந்தத் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டு, ஈரோடு, கன்னியாகுமரி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் இருக்கிற மக்களுக்கு முழுமையாக புற்றுநோய் குறித்த பரிசோதனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தை மேலும் தமிழ்நாடு முழுவதிலும் விரைவுப்படுத்துவ தற்கான அந்தச் செயல், இந்த அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்தார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் செ.கொளத்தூர் கிராமத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வாக்காளர்களிடத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர் உள்ளிட் நிர்வாகிகள் உள்ளனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்ட செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், ஜூன் 23 -

நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (23.06.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணைச் செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: ஜூலை 10 ஆம் தேதி நடைபெறும் விக்கிர வாண்டி இடைத்தேர்தல் பணியில் பங்கேற்பது குறித்து,

நாமக்கல் நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து,

நிர்வாக காரணங்களுக்காக ஒன்றியங்களை பிரிப்பது தொடர்பாக

ஒன்றியங்களில் நடைபெற உள்ள மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம் குறித்து,

கழக ஆக்கப் பணிகள் குறித்து,

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாநில மருத்துவ அணி தலைவர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி, மாநில மருத்துவ அணி செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆலோசனைக்கிணங்க, ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பொன்னுச்சாமி முன்னிலையில் கஸ்பாபேட்டையில் உள்ள மரியாலாய காப்பகத்தில் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் சு.குணசேகரன் மற்றும் தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் விவேக், மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் யுவபாலகுமாரன், டாக்டர் அருண், கே.ஜியாபுதீன், தீனா மற்றும் மருத்துவ அணி நிர்வாகிகள் குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

மீனவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டம்!

புதுவை மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா எச்சரிக்கை!

புதுவை, ஜூன் 22 -

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறோம் என்று கூறி புதுச்சேரி அரசு ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் மீனவர்களை கவரும் வகையில் பல்வேறு அறிவிப்புகளை வாசிப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளதை மீனவர்கள் நன்கு அறிவர். அந்த வகையில், 70 வயதிலிருந்து 79 வயதுடைய மீனவ முதியோர்களின் நலன் கருதி முதியோர் உதவித்தொகை ரூ. 3 ஆயிரத்திலிருந்து ரூ. 3 ஆயிரத்து 500 வழங்கப்படும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலுள்ள மீனவ கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை மற்றும் வடிகால் வசதிகளை மேம்படுத்த சட்டமன்ற தொகுதிக்கு ஒரு கிராமம் வீதம் 13 மீனவ கிரா மங்களில் கிராமம் ஒன்றிற்கு ரூ. 1 கோடி செலவு செய்யப்படும். சென்டாக் மூலம் தேர்வு செய்யப்பட்டு மேற்படிப்பு படிக்கும் மீனவ மாணவர்களுக்கு புதுச்சேரி ஆதிதிராவிடர் நலத்துறைக்கு இணையாக நிதியுதவி வழங்கப்படும்.

500 விசைப்படகு உரிமையாளர்கள் பயன்பெறும் வகையில் ஒன்றிய அரசின் திட்டத்தில் தொலைதொடர்பு சாதனப் பொருட்கள் மற்றும் மீன் பிடி உபகரணங்கள் வாங்க ரூ. 1 கோடி அளிக்கப்படும். உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை மேம்படுத்த 200 ஹெக்டேர் அளவு உள்ள ஏரிகளில் விரல் அளவு மீன்குஞ்சிகளை இருப்பு செய்ய 2 லட்சம் மீன் குஞ்சிகள் வாங்கப்படும். ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க மூன்று பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 16 லட்சம் மானியம் வழங்கப்படும்.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடல்பாசி வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரி கடற்கரை பகுதியில் ரூ. 40 லட்சம் மதிப்பீட்டில் சுனாமி நினைவிடம் கட்டப்படும். முன் மாதிரி மீனவ கிராமம் அமைக்கப்படும். நடப்பாண்டில் மீனவர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் 100 சதவீதம் வழங்கப்படும். மீனவ மகளிருக்கு நிதி அதிகாரம் அளிக்கும் பொருட்டு மீனவ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 1 லட்சம் என ஆண்டிற்கு 50 சுய உதவிக் குழுக்கள் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

அரியாங்குப்பம் ஆறு தூர்வார பூர்வாங்க பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இயற்கை சீற்ற காலங்களில் மீனவர்களின் மீன்படி சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் பல்வேறு இழப்புகளுக்கு காலத்தோடு நிவாரணம் வழங்கும் பொருட்டு ஒரு புதிய திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் என கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது ஆனால் அவை அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

அதேபோல், மீனவ மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கடல் அரிப்பை தடுக்கவும், படகுகளின் பாது காப்பை உறுதிச் செய்யவும் தூண்டில் முள் வளைவு அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் கிடப்பில் உள்ளது. மீனவ கிராமங்களில் கடல்நீர் உட்புகுவது சமீப காலமாக அதிகரித்து வருகிறது. இதனால் கடற்கரையோரம் வசிக்கும் மீனவ மக்கள் அச்சத்துடன் வாழும் சூழல் உள்ளது. இதுகுறித்து விரிவான ஆய்வு நடத்தி, புதுச்சேரி, காரைக்கால் கடலோர கிராமங்களின் கரையோரங்களில் வசிக்கும் மீனவர்கள் மற்றும் அவர்களின் வீடுகளை காப்பாற்றும் வகையில் கிரானைட் கல் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டும். மீனவர்களுக்கான கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இரண்டு சதவிதமாய் இருப்பதை உயர்த்தி வழங்கிட வேண்டும். பல ஆண்டுகாலமாக நடத்தப்படாமல் உள்ள உலக மீனவர் தின விழாவை நடப்பாண்டில் நடத்திட வேண்டும் போன்ற முக்கிய பிரச்சினைகள் குறித்து அரசு கவனம் செலுத்தாமல் இருப்பது வருத்தம் அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

அதேபோல், தடைக்காலத்தில் வழங்க வேண்டிய நிவாரண உதவித் தொகை மீன்பிடி தடைக்காலம் முடிந்து மிகவும் காலதாமதமாக வழங்குவது என்பது ஆட்சியாளர்களின் அலட்சியத்தையே காட்டுகிறது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும். இனிவரும் காலங்களில் மீனவர்களுக்கு காலத்தோடு உதவித் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், அண்டை மாநிலமான தமிழகத்தில் மீன்பிடி தடைக்கால நிவாரணம் ரூ. 8 ஆயிரத்து 500 வழங்குவதுபோல் புதுச்சேரி அரசும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுச்சேரி அரசு மீனவர்களுக்கு புதியதாக எதையும் செய்ய தேவையில்லை. அவர்களுக்கு இந்த அரசு சொன்னதை செய்தால் போதும். மீனவர்களுக்கு அரசு மேற்சொன்ன வாக்குறுதிகளை நடப்பாண்டில் நிறைவேற்றாவிட்டால் புதுச்சேரி மீனவர்களை ஒன்று திரட்டி தி.மு.க. மீனவர் அணி சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்பதை எச்சரிக்கையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு புதுவை மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தெரிவித்துள்ளார்.

தி.மு.க. மாணவர் அணி சார்பில்

சென்னை வள்ளுவர் கோட்டத்தில், ஜூன் 24 அன்று நடைபெறுவதாக இருந்த கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!

நீட் தேர்வே தமிழ்நாட்டிற்கு தேவையில்லை என்பதற்காக நிறைவேற்றி அனுப்பியிருக்கும் சட்ட மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் தர வேண்டுமென்றும் - நீட் தேர்வில் நடைபெற்றுள்ள மிகப்பெரிய மோசடிகளை, குளறுபடிகளை களைவதற்கு மேல் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க மாணவர் அணிச் சார்பில் வருகிற 24.06.2024 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் நடைபெற இருந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது. ஆர்ப்பாட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 19.06.2024

சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

விக்கிரவாண்டி தொகுதி காணை வடக்கு ஒன்றியம் கடையம் ஊராட்சி பா.ம.க முன்னாள் கிளைச் செயலாளர் ஆறுமுகம் , பா.ஜ.க. கிளைச் செயலாளர் சம்பத், மத்திய நலத்திட்டக்குழு உறுப்பினர் பாஸ்கர், செயற்குழு உறுப்பினர் அண்ணாதுரை, கிளை பொறுப்பாளர் ரங்கநாதன் ஆகியோர் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மற்றும் விக்கிரவாண்டி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.முருகன், கல்பட்டு வி.ராஜா ஜி.ரவிச்சந்திரன், வழக்கறிஞர் பொன்.கோபு உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

தமிழ்நாட்டில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூன் 23 -

தமிழ்நாட்டில் இன்றும் நாளையும் ஓரிரு இடங்களில் மிக கனமழை பெய்யக் கூடும் என இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. 12 முதல் 20 செ,மீ வரை மழை பெய்யக்கூடும் என ஆரஞ்சு அலர்ட் விடுத்துள்ளது. தமிழ்நாட்டில் ஜூன் 24, 25, 26ம் தேதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவமழை மீண்டும் தீவிரம் அடைய உள்ளது. அதிலும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்ய அதிகளவில் வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த வகையில் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று முதல் 26 வரை மழைக்கான வாய்ப்பு இருக்கிறது.

அதில் இன்றும், நாளையும் 8 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இன்றும், நாளையும் தமிழ்நாட்டில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, நெல்லை மாவட்டங்களின் மலைப்பகுதிகள், கன்னியாகுமரியில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழ்நாடு மின் கழகத் தொ.மு.சங்கத்தின்

விழுப்புரம் மின் திட்ட நிர்வாகிகள்!

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் விழுப்புரம் மின் திட்ட தொ.மு.ச. நிர்வாகிகள் அறிவிப்பது தொடர்பாக கழக துணைப்பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி., மற்றும் தலைமைக் கழக மேலிடப் பார்வையாளர் வழக்கறிஞர் அ.சரவணன் ஆகியோர் இரு தரப்பாரிடம் பேசி விழுப்புரம் மின் திட்ட தொ.மு.ச. நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

விழுப்புரம் மின் திட்ட நிர்வாகிகள் பட்டியல்

திட்டத் தலைவர்	-	ஆர்.சரவணபிரபு (விக்கிரவாண்டி)
திட்டச் செயலாளர்	-	பி. சண்முகம் (விழுப்புரம்)
திட்டப் பொருளாளர்	-	என். முத்து (வளவனூர்)
திட்ட துணைத் தலைவர்	-	எஸ்.பன்னீர் செல்வம் (விக்கிரவாண்டி)
திட்ட துணைத் தலைவர்	-	எஸ்.சதீஷ்குமார் (ஜானகிபுரம், விக்கிரவாண்டி)
திட்ட துணைத் தலைவர்	-	வி.முரளிதரன் (விழுப்புரம்)
திட்ட துணைச் செயலாளர்	-	எஸ்.அணில்குமார் (கண்டமங்களம்)
திட்ட துணைச் செயலாளர்	-	எஸ். வள்ளல் பிரபு (முருக்கேரி)
திட்ட துணைச் செயலாளர்	-	சு. இராசையன் (விழுப்புரம்)

கோட்டச் செயலாளர்கள்

விழுப்புரம் விநியோகம்	-	பி. சரவணபிரபு (பூத்தப்பேடு)
கண்டமங்கலம்	-	கே. மணிகண்டன் (மண்டகப்பட்டு)
திண்டிவனம்	-	பி. சுரேஷ் (முருக்கேரி)
செஞ்சி	-	ஆர். தேசிங்கு (ஈச்சூர்)
மத்திய அலுவலகம் (விழுப்புரம்)	-	ஆர். ராம்குமார் (மத்திய அலுவலகம், விழுப்புரம்)
திட்ட சிறப்புத் தலைவர்	-	பி. ஏசுதாஸ் (செஞ்சி)

மேற்கண்ட நிர்வாகிகள் தலைமைச் சங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கலைஞரகம்
சென்னை - 17
நாள்- 21.06.2024

மு.சண்முகம் எம்.பி.
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை